

ஆத்தூர் தொகுதியில் கூட்டுறவுத்துறை சார்பாக கலை மற்றும் அறிவியல் கல்லூரி கன்னிவாடியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கொண்டுவந்ததால் மலை கிராம மாணவிகள் எளிதாக உயர்க் கல்வி கற்க முடிகிறது என கூறி ஊரகவளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு நன்றி தெரிவித்தனர். அருகில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, நடராஜன் உள்ளனர்.



கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், பிச்சாவரம் சதுப்பு நிலம், கிள்ளை காப்புக்காட்டில் 05.06.2023 அன்று உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு சுற்றுச்சூழலை பேணிக்காப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் .எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் மற்றும் மஞ்சப்பை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் த.தொல்.திருமாவளவன் எம்.பி., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், உதவி ஆட்சியர் சிதம்பரம் திருமதி. சுவேதா சுமன், மாவட்ட வன அலுவலர் (கூ.பொ.) சுமேஷ் சோமன், மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### பள்ளிகள் திறப்பு குறித்த அறிவிப்புக்கு பலரும் வரவேற்பு!

# மாணவர் நலனில் அரசு கொண்டுள்ள அக்கறை தொடரட்டும்!

### ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, 7–

மாணவர் நலனில் தமிழ்நாடு அரசு கொண்டுள்ள அக்கறை தொடரட்டும் என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து 6.6.2023 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:–

தமிழ்நாட்டை பொறுத்தவரை ஏப்ரல், மே மாதங்கள் கடும் கோடை காலம். இந்த காலங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்படும். இந்த ஆண்டும் கடந்த ஏப்ரல், மே மாதங்கள் கோடை விடுமுறை அளிக்கப்பட்ட நிலையில் கத்திரி வெயில் எனப்படும் அக்னி நட்சத்திரம் கடந்த மாதம் 28ம் தேதி வரை நீடித்தது. அக்னி நட்சத்திரம் முடிந்த பின்னர் படிப்படியாக வெப்பம் குறையும். ஜூன் 1ம் தேதி தென்மேற்கு பருவமழை காலம் தொடங்கி விடும். பருவமழை காலத்திற்கான அறிகுறியாக தென்மேற்கு பருவக் காற்று, மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் இருந்து வீசும். பருவக் காற்று தொடங்கி விட்டால் இதமான சூழ்நிலை நிலவும். வெப்பம் தணிந்து விடும்.

ஆனால் இந்த ஆண்டு வழக்கத்திற்கு மாறாக ஜூன் மாதம் பிறந்த பின்பும் கடும் வெப்பம் நீடித்து வருகிறது. தமிழ்நாட்டில் கோடை விடுமுறை முடிந்து ஜூன் 1ல் பள்ளிகள் திறக்கப்படும். இந்த ஆண்டும் 6 முதல் பிளஸ்2 வரையில் ஜூன் 1ம் தேதியும், 1 முதல் 5ம் வகுப்புகளுக்கு ஜூன் 5ம் தேதியும் பள்ளிகளை திறக்க திட்டமிட்டிருந்தது, பள்ளிக் கல்வித் துறை. பள்ளிகள் திறப்பிற்கான ஆயத்தப் பணிகளும் அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கின. குறிப்பாக பள்ளி கட்டிடங்கள் அனைத்தும் நல்ல நிலையில் உள்ளதா, பழுதடைந்த கட்டிடங்கள் இருக்கிறதா என மாவட்ட



தினகரன்

ஜூன் 6, 2023 செவ்வாய்க்கிழமை

மாணவர் நலனில் அக்கறை

தமிழ்நாட்டை பொறுத்தவரை ஏப்ரல், மே மாதங்கள் கடும் கோடை காலம். இந்த காலங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்படும். இந்த ஆண்டும் கடந்த ஏப்ரல், மே மாதங்கள் கோடை விடுமுறை அளிக்கப்பட்ட நிலையில் கத்திரி வெயில் எனப்படும் அக்னி நட்சத்திரம் கடந்த மாதம் 28ம் தேதி வரை நீடித்தது. அக்னி நட்சத்திரம் முடிந்த பின்னர் படிப்படியாக வெப்பம் குறையும். ஜூன் 1ம் தேதி தென்மேற்கு பருவமழை காலம் தொடங்கி விடும். பருவமழை காலத்திற்கான அறிகுறியாக தென்மேற்கு பருவக் காற்று, மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் இருந்து வீசும். பருவக் காற்று தொடங்கி விட்டால் இதமான சூழ்நிலை நிலவும். வெப்பம் தணிந்து விடும்.

கலெக்டர்கள் உன்னிப்பாக கவனிக்க குழுவை ஏற்பாடு செய்து ஆய்வும் செய்தனர். இதன் மூலம் குறித்த காலத்தில் பள்ளிகளை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும் கத்திரி வெயில் முடிந்த பிறகும் வெப்பம் தணியவில்லை, மாறாக அதிகரித்தது. கடும் வெப்பம் காரணமாக பள்ளிகள் திறப்பை தள்ளி வைக்க வேண்டும் என பெற்றோரும் அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். முதலீடுகளை தமிழ்நாட்டிற்கு கொண்டு வர ஜப்பான் சென்ற போதிலும் முதல்வர் மு.க.ஸ்டாலின், பள்ளி மாணவ, மாணவிகள் நலனை கருத்தில் கொண்டு பள்ளிகள் திறப்பை ஜூன் 7ம் தேதிக்கு தள்ளி வைத்து அறிவிப்பு வெளியிட்டார். ஆனாலும் நேற்று வரை வெப்பம் தணியவில்லை. சென்னை உள்ளிட்ட பல நகரங்களில் வெப்பம் தகித்து வருகிறது. வெயில் புதிய உச்சத்தை தொட்டுள்ளது. எனவே பள்ளிகள் திறப்பை மேலும் ஒரு வாரத்திற்கு தள்ளி வைக்குமாறு பெற்றோர், கல்வியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடம் இருந்தும் கோரிக்கை எழுந்தது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு, அமைச்சர்கள், கல்வித் துறை அதிகாரிகளுடன் கலந்து ஆலோசனை செய்தது. அதன் அடிப்படையில் பள்ளிகள் திறப்பை மேலும் ஒரு வாரத்திற்கு தள்ளி வைத்துள்ளது. மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் கல்விச் சாலைகளில் இதமான சூழல் இருக்க வேண்டும். வெப்பம் தகிக்கும் சூழ்நிலையில் கல்விச் சாலைகளை திறப்பது சரியாக இருக்காது என்று கருதி பள்ளிகள் திறப்பை மேலும் ஒரு வாரத்திற்கு தள்ளி வைத்துள்ளது பள்ளிக் கல்வித் துறை. ஜூன் 12ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என்றும், 1 முதல் 5ம் வகுப்புகளுக்கு ஜூன் 14ம் தேதி பள்ளிகளை திறக்கவும் முடிவு செய்து தமிழ்நாடு அரசு அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இந்த முடிவை மாணவர்கள், பெற்றோர், கல்வியாளர்கள் உள்ளிட்ட பலரும் வரவேற்றுள்ளனர். மாணவர்கள் நலனில் தமிழ்நாடு அரசு கொண்டுள்ள அக்கறை தொடரட்டும்.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### ஒடிசா ரயில் விபத்து: தமிழ்நாட்டைச் சேர்ந்த

# தேசிய பேரிடர் மீட்புப் படை வீரருக்கு வாழ்த்து!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஜூன் 7 -

‘‘ஒடிசா ரயில் விபத்தில் பல உயிர்களைக் காப்பாற்றிய தமிழ்நாட்டைச் சேர்ந்த தேசிய பேரிடர் மீட்புப்படை வீரர் வெங்கடேசனை வாழ்த்துகிறேன்’’ என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டிருப்பதாவது:-

ஒடிசா இரயில் விபத்தில் பல உயிர்களைக் காப்பாற்றக் காரணமாக இருந்துள்ளார் தமிழ்நாட்டைச் சேர்ந்த தேசிய பேரிடர் மீட்புப் படை வீரர் வெங்கடேசன் அவர்கள்.

உரிய நேரத்தில் அவர் உயரதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்து, அருகிலிருக்கும் தேசிய பேரிடர் மேலாண்மைப் படையினர் விரைந்து வந்ததினால் எத்தனையோ உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

மிக அதிர்ச்சிகரமான நேரத்தில் தெளிவாகவும் விரைவாகவும் செயல்பட்ட அவரைப் பாராட்டுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

### சேலம்– திருப்பூர் மாவட்டங்களில்

# நீரில் மூழ்கி உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 7-

சேலம் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், ஆவடத்தூர் கிராமத்தைச் சேர்ந்த ஜனார்த்தனன், த/பெ. ஆனந்தன் (27) மற்றும் அவரது மனைவி பவித்ரா (வயது 24) ஆகியோர் எடப்பாடி வட்டம், பூலாம்பட்டி கிராமம், மொளப்பாறை என்ற இடத்தில் காவிரி ஆற்றில் 4.6.2023 அன்று மாலை குளிக்கச் சென்றபோது நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், வெள்ளக்கோவில் கிராமம், மஜரா செம்மாண்டம்பாளையத்தில் இயங்கி வரும் தனியாருக்குச் சொந்தமான குவாரியில் பணிபுரிந்து வந்த நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த பாபு (எ) ஜானகிராமன், த/பெ. காமராஜ் (வயது 37) என்பவர் 3.6.2023 அன்று எதிர்பாராத விதமாக குவாரியில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

# தோட்டக்கலைத் துறைக்குச் சொந்தமான ரூ.1,000 கோடி நிலம் மீட்பு!

சென்னை, ஜூன் 7 -

சென்னை அண்ணா மேம்பாலம் அருகில் தோட்டக்கலைத் துறைக்குச் சொந்தமான, 1,000 கோடி ரூபாய் மதிப்பிலான, 115 கிரவுண்ட் நிலம், வருவாய் துறை அதிகாரிகளால் நேற்று முன்தினம் அதிரடியாக மீட்கப்பட்டது. சென்னை அண்ணா மேம்பாலம் அருகில், கதீட்ரல் சாலையில் இரண்டு பக்கத்திலும் தோட்டக்கலை துறைக்குச் சொந்தமான நிலங்கள் உள்ளன.

இந்த நிலங்களை, ‘தோட்டக்கலை சங்கம்’ என்ற அமைப்பு வாயிலாக, குத்தகை பெற்று, சிலர் பயன்படுத்தி வந்தனர்...

இந்த நிலங்களை தோட்டக்கலை சங்கம் நடத்தி வரும் கிருஷ்ணமூர்த்தி என்பவர் அத்துமீறி பயன்படுத்தி வருவதாக புகார் எழுந்தது. கடந்த, 1989 முதல் இந்த நிலத்தை மீட்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது.

இதில், தனியார் விடுதியாக பயன்படுத்தப்பட்டு வந்த 20 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டு, கடந்த, 2006 11 தி.மு.க., ஆட்சிக்காலத்தில், ‘செம்மொழி பூங்கா’ அமைக்கப்பட்டது.



தோட்டக்கலை சங்கத்துக்கு வழங்கப்பட்ட குத்தகையை ரத்து செய்து, நிலத்தை மீட்க, சென்னை மாவட்ட ஆட்சியர் வாயிலாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இருப்பினும், தி.மு.க. அ.தி.மு.க., ஆட்சிக்காலங்களில், இது தொடர்பான மாவட்ட ஆட்சியர், நில நிர்வாக ஆணையரின் உத்தரவுகள் மாறி மாறி வந்தன.

இதன் காரணமாக, தனியார் கட்டுப்பாட்டில் இருந்த இந்த நிலத்தை மீட்பதில் சிக்கல் ஏற்பட்டது. இதில், நிலத்தை மீட்பதற்கான நில நிர்வாக துறை உத்தரவுக்கு எதிராக, தோட்டக்கலை சங்கம் தொடர்ந்த வழக்கு, 2011ல் தள்ளுபடி செய்யப்பட்டது.

இதை எதிர்த்து தோட்டக்கலை சங்கம் சார்பில், உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், தோட்டக்கலை சங்கத்தின் மேல்முறையீட்டை கடந்த மார்ச் மாதம் தள்ளுபடி செய்தது. ‘அரசு நிலத்தை மீட்க, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கலாம்’ என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த உத்தரவு நகலுக்காக தோட்டக்கலை துறை காத்திருந்தது. இந் நிலையில், உயர் நீதிமன்ற உத்தரவு மற்றும் தோட்டக்கலை துறையின் கடிதம் அடிப்படையில் வருவாய் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

நில நிர்வாகத்துறை ஆணையர் உத்தரவு அடிப்படையில், சென்னை தெற்கு வருவாய் கோட்டாட்சியர், மயிலாப்பூர் வட்டாட்சியர் ஆகியோர். நேற்று முன்தினம் மாலை, 6:30 மணிக்கு இந்த நிலத்துக்கு ‘சீல்’ வைத்தனர்.

தோட்டக்கலைத்துறை உயரதிகாரி ஒருவர் கூறியதாவது:-

இந்த நிலம் தமிழக அரசிற்கு சொந்தமானது என, கடந்த மார்ச் மாதம் சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இதையடுத்து, அந்த இடத்தை மீட்பதற்கான, சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது, அந்த இடத்திற்கு, வருவாய்த்துறை சார்பில், சீல் வைக்கப்பட்டுள்ளது. இதன்படி, 1,000 கோடி

115 கிரவுண்ட் நிலம் தமிழக அரசின் கட்டுப்பாட்டுக்கு வந்துள்ளது அடுத்தகட்டமாக, இந்த நிலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

### தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில்

# கோரிக்கை மனு பெட்டிகள்!

### வாரியத் தலைவர் பூச்சிமுருகன் பார்வையிட்டார்!

சென்னை, ஜூன் 7 -

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் பயனாளிகள் மற்றும் நில உரிமையாளர்கள் தங்கள் குறை பாடுகளைத் தீர்த்துக் கொள்ள வசதியாக தமிழ்நாட்டில் 16 இடங்களில் கோரிக்கை மனுப் பெட்டி வைக்கப்படும் என அறிவித்தார்கள்.

அதன்படி ஜூன் 3ந் தேதி முதல் 30ந் தேதி வரை அரசு அலுவலக வேலை நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை கோரிக்கை மனு பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. உரிய ஆவணங்கள் அனைத்தையும் நகல் எடுத்து, மனுவுடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஏற்கனவே மனு செய்திருந்தாலும், மீண்டும் இந்தக் கோரிக்கை மனு பெட்டியைப் பயன்படுத்திக் கொள்வது விரைவான தீர்வுக்கு வழி வகுக்கும்.

வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ் முருகன் அவர்கள் நேற்று (06.06.2023) நந்தனம், சி.ஐ.டி. நகர், பட்டினம் பாக்கம் கோட்ட வீட்டு வசதி வாரிய அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள கோரிக்கை பெட்டிகளை பார்வையிட்டு பொதுமக்கள் தங்கள் கோரிக்கை மனுக்களை பெட்டிகளில் போட ஏற்பாடு செய்துள்ள வசதிகளை ஆய்வு செய்து அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

மேற்பார்வை பொறியாளர்கள் ராமகிருஷ்ணன், சுபாஷ், செயற்பொறியாளர்கள் மஞ்சுநாதன், ராஜேந்திரன் உள்ளிட்ட அலுவலர்கள் உடன் இருந்தனர்.



சென்னை புழல் மத்திய சிறைச்சாலையில் ஏற்கனவே சட்டமன்றத்தில் அறிவித்தபடி சிறைவாசிகளுக்கு கூடுதல் உணவு வகைகளை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார். உடன் சிறைத்துறை டி.ஜி.பி. அமலேஷ் பூஜாரி உள்ளிட்ட அதிகாரிகள் உடனுள்ளனர்.



முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மதுரையில் விரைவில் திறக்கப்படவுள்ள ”கலைஞர் நூற்றாண்டு நூலகத்திற்கு” அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியிடம் மன்றம் முனைவர் நா.சண்முகநாதன் தலைமையிலான தமிழ்நாடு அரசு உதவி பெறும் சிறுபான்மையற்ற பள்ளிகளின் ஆசிரியர் கூட்டமைப்பு கடந்த மே 5ஆம் தேதி ஆயிரம் புத்தகங்களை நன்கொடையாக வழங்கியது.அமைச்சர் அப்புத்தகங்களைப் பொது நூலகத்துறை இயக்குநர் இளம்பகவத்திடம் நேற்று (06/06/2023) ஒப்படைத்தார்.